பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 333

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 07
14 யூலை, 1986.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களினதும், அரச கூட்டுத்தாபனங்களினதும்
எல்லாத் தலைவர்களுக்கும்.

அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய
ஊதியத்தின் உச்ச வரம்பு

1982.04.02ஆந் தேதிய 392ஆம் இலக்கத்தை கொண்ட தாபனச் சுற்று நிருபத்தின் தொடர்பாக 1986 சனவரி 01ஆம் திகதி தொடக்கம் புதிய உச்ச வரம்பு, "1986இன் புதிய சம்பள" அளவுத் திட்டங்களின் உச்சக் கட்டமான மாதத்திற்கு ரூபா. 7800/- ஆகும்.

2. இந்த உச்ச வரம்பு பின்வருவோருக்கு பொருந்தாது:-

(1) ஏலவே சேவையில் உள்ள ஒரு உத்தியோகத்தர்/ பணிப்பாளர்/மீளப் பணிக்கமர்த்தப்பட்ட ஓய்வூதியம் பெறுநர் ஒருவர் முன்னைய மாதமொன்றுக்கு ரூபா. 3500/-அல்லது ரூபா. 5200/- உச்சவரம்புகளிலிருந்து அமைச்சரவையின் தீர்மானத்தினால் விலக்களிப்புப் பெற்றவராயிருப்பின்,

(11) அவ்வாறான ஒருவர், வருங்காலத்தில் அமைச்சரவையின் முடிவினால் உச்சவரம்பிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தால்.

ஒப்பம்: டி. பி. ஐ. பி. எல். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.